## ஓம் ஸ்ரீ சாயிராம் பிரசாந்தி சந்தேஷ் வினா விடை

## நேரம் வினா எண் 331

## தலைப்பு:"வாழ்க்கை ஓர் ஆடு களம்.

## வாழ்க்கை ஓர் விளையாட்டு "

**நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்று பக்கம் 82-88லிருந்து தேர்வு செய்யபட்ட வினா விடை பகுதி.**

கேள்வி:ஸ்வாமி ஒரு பக்கம் எங்களுடைய பெற்றோர்கள் எங்களை உலக வாழ்க்கையை நோக்கி இழுக்கிறார்கள்.
மறுபுறம் தங்களுடைய தெய்வீக உபதேசங்கள் மற்றும் வழிகாட்டுதல்கள்.
இந்த இரண்டில் எதனை பின்பற்றி நாங்கள் நடந்து கொள்ள வேண்டும் ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
உங்கள் பெற்றோர்களின் அறிவுறைகள் கடவுளின் உபதேசங்களுக்கு எதிரானதாக இருந்தால் நீங்கள் பெற்றோர் சொல்வதை விட்டு விட்டு கடவுள் காட்டுகின்ற வழியில் நடக்க வேண்டும்.உங்கள் பெற்றோர்களிடம் ஆன்மீக பாதையின் மேன்மையையும் மாண்பையும் பணிவுடன் நீங்கள் எடுத்து சொல்லி விளக்க வேண்டும்.நமது பால்விகாஸ் குழந்தைகளில் பலரும் தங்களின் நடத்தையால் பெற்றோர்களிடம் மிக பெரிய மன மாற்றத்தை கொண்டு வந்திருக்கின்றனர்.ஸ்ரீ சத்ய சாயி பிரைமரி ஸ்கூல் ஸ்ரீ சத்ய சாயி உயர்நிலை பள்ளி மற்றும் உயர் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களாலும் அத்தகைய மன மாற்றம் ஏற்பட்டுள்ளது.
முதலில் மாணவர்களின் குடும்பத்தில் மன மாற்றம் ஏற்பட்டு பின் சமுதாய மாற்றம் ஏற்பட வேண்டும்.
உண்மையை சொல்லப் போனால் நீங்கள் உங்கள் பெற்றோர்களிடமிருந்து வரவில்லை.பெற்றோர்கள் மூலமாக வந்துள்ளீர்கள்.அவ்வளவு தான். உண்மையில் நீங்கள் கடவுளிடமிருந்து வந்துள்ளீர்கள்.இந்த ஆழ்ந்த புரிதல் மட்டும் உங்களுக்கு வந்து விட்டால் உங்கள் எண்ணம் சொல் செயல்

அனைத்துமே தெய்வீக தன்மையுடன் திகழும்.பாயசத்தை ஒரு ஓட்டை பாத்திரத்தில் ஊற்றி வைத்தால் அந்த ஓட்டை வழியாக கசிகின்ற பாயசமும் இனிப்பாகத்தானே இருக்கும்.
அது போலவே நீங்கள் தெய்வத்திடமிருந்தே தோன்றினீர்கள் என்ற உண்மை உங்களுக்கு புரியும் போது உங்கள் எண்ணம் சொல் செயல் என அனைத்துமே தெய்வீக தன்மையுடன் திகழும்.

அடுத்த கேள்வி: ஸ்வாமி உலகம் அறிவியலிலும் தொழில் துறையிலும் முன்னேறி கொண்டு தான் இருக்கிறது.ஆனால் படித்த இன்றைய இளைஞர்கள் வாழ்க்கையில் ஏற்படும் சிறு பிச்சனைகளுக்கும் கூட ஈடு கொடுக்க முடியாமல் துவண்டு விடுகிறார்கள்.பொறுமையும் திறமையும் இல்லாமல் விரக்தி அடைந்து மது மற்றும் போதை மருந்து பழக்கங்களுக்கு அடிமையாகி வாழ்க்கையை அழித்து கொள்கிறார்கள்.
இவர்களுக்கு தங்களின் அறிவுரை என்ன என்று கூற முடியுமா ஸ்வாமி

ஸ்வாமியின் பதில்:இன்றைக்கு அதிக அளவில் இளைஞர்களும் இளம் பெண்களும் கல்லூரிக்கும் பல்கலைகழகங்களுக்கும் கல்வி கற்க செல்கிறார்கள்.இது நல்லது தான்.ஆனால் மேன்மையான மனித குணங்கள் மறைந்து அழிந்து வருவதை நாம் பார்க்கிறோம்.
கல்வி என்பது வசதியாக வாழ்வதற்கானது மட்டுமே அல்ல.அது நெறி தவறா வாழ்க்கைக்குமானதாகும்.
கல்வி என்பது விவரங்களை தெரிந்து கொள்வதற்கானதானது மட்டுமல்ல.அது நல்ல மன மாற்றத்திற்கானதாகும்.
கல்வி என்பது மனிதனை மனித இயல்பிலிருந்து தெய்வீக இயல்பிற்கு உயர்த்தி செல்வதாகும்.
கல்வி பணம் சம்பாதிப்பதற்கானதல்ல.அது நல்ல குணம் சம்பாதிப்பதற்கானதாகும்.
நன்னெறிகள் கற்று தராத கல்வியால் பயனேது.நன்னெறிகள் பின்பற்ற படாத முன்னேற்றம் எப்படி இருக்கும்.அறிவியலும் தொழில் வளர்ச்சியும் எப்படி இருக்கும். நல்ல மாண்புகள் கடைபிடிக்கப் படாததால்தான் இன்றைய இளைஞர்கள் போதைக்கு அடிமையாகிறார்கள்.அவர்கள் மன உறுதி இல்லாமல் கோழைகளாக இருக்கிறார்கள்.மனதிற்கு எஜமானர்களாக இருக்க வேண்டிய அவர்கள் கெட்ட பழக்கங்களுக்கு அடிமையாகி விடுகிறார்கள்.
வாழ்க்கை என்பது ஒரு சவால்.அதை தைரியமாக எதிர் கொள்ள வேண்டும் என அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.அவர்கள் விரக்தி அடைந்து விலகி

ஓடாமல் வாழ்க்கையில் வரும் பிரச்சினைகளை எதிர் கொண்டு சமாளிக்க தயாராக இருக்க வேண்டும்.நடைமுறை வாழ்க்கை போட்டிகள் நிறைந்த ஆடுகளமாகும்.அதில் திறமையுடன் ஆட அவர்கள் தங்களை கவனமுடன் தயார் செய்து கொள்ள வேண்டும்.

மஹாபாரதத்திலும் இது போன்ற ஒரு நிலை ஏற்பட்டது.

ஒரு கோழையை போல் போர்களத்தை விட்டு ஓடிவிட முடிவு செய்தான் அர்ஜுனன்.அப்போது பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையை உபதேசித்து அவரிடத்தில் தைரியத்தையும் நம்பிக்கையையும் ஊட்டினார். இது அர்ஜுனனுக்கு மன தைரியத்தையும் உடல் ஊக்கத்தையும் பெற்று தந்தது.

வாழ்க்கை என்பது ஒரு ஆடு களம்-விளையாட்டு.அதை ஆடி பார்.அதை சிரத்தையுடன் ஆடி வெற்றி தோல்வியை சமமாக பாவிக்க வேண்டும்.இந்த உலகத்தில் அன்பு இல்லாதவர் எவருமே இல்லை.வாழ்க்கை என்பதே அன்பு தான்.

அனைவரிடமும் அன்பை பகிருங்கள்.அன்பே கடவுள். எனவே அன்பில் வாழுங்கள்.உங்கள் மனதில் அன்பு நிறைய இருக்கலாம்.ஆனால் அதை எத்தனை பேருடன் பகிர்ந்து கொள்கிறீர்கள்.இதுவே கருத்து மோதல்களுக்கும் மன வேற்றுமைகளுக்கும் காரணம்.

உங்கள் திறமை அனைத்தையும் சேர்த்து உங்கள் தொழிலை- வேலையை செய்திடுங்கள்.சோம்பி இருக்காதீர்கள்.

காற்றில் கோட்டைகட்டிக் கொண்டிருக்காமல் உங்கள் கனவை நனவாக்க உழைத்திடுங்கள்.வாழ்க்கை என்பது சாதிப்பது -நீண்ட இலக்கை அடைய கனவு காண்பது. அதை சாதிக்க முற்படுங்கள்.யதார்த்தத்தை விட்டு விலகி சென்று திட்டமிடுகிறீர்கள்.அது சரியல்ல.

கடவுளை பிரார்த்தித்த படி கடமையை செய்யுங்கள்.அப்போது நீங்கள் செய்யும் வேலையே இறை வழிபாடு ஆகி விடும்.

அப்போது நீங்கள் வேலை செய்வதே ஓர் யோகாவாக ஆன்மீக சாதனாவாக மாறி விடும்.

வேலையை செய்வதென்பது ஒரு ஆன்மீக ஒழுக்கமாகவே மாறி விடும். அர்த்தமில்லாத விஷயங்களில் கவனத்தை சிதற விடாதீர்கள்.வாழ்க்கை என்பது எப்போதும் நற்செயல்கள் புரிந்துகொண்டேயிருப்பதுதான் என உணர்ந்து கொள்ளுங்கள்.

அடுத்த கேள்வி:

ஸ்வாமி ஒழுக்க குறையோ தனிப்பட்ட ஆளுமையோ கல்வி தரமோ கீழிறங்கி விட்டால் தாங்கள் பொறுத்து கொள்வதில்லை
உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்ப நடந்து கொள்ளாத மாணவர்களை நீங்கள் வெளிப்படையாகவே கண்டிக்கவும் செய்கிறீர்கள்.அதை நேரில் பார்க்கும் போது எங்களுக்கு மிகுந்த பயம் உண்டாகிறது.இதனை நாங்கள் எப்படி எடுத்து கொண்டு செயல்படுவது ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
முதலாவதாக நான் சிறிதும் சுயநலம் இல்லாதவன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.நான் ஒரு போதும் யாரிடமும் கோபம் காட்டாதவன் என்பதை நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.அன்பே கடவுள்.நான் உங்களிடம் கோபப்படுவதாக நடிக்கிறேன் உங்களை திருத்துவதற்காக. அது கூட பனித்துளி போல் உடனே காணாமல் போய்விடுகிறது.
நீங்கள் செய்வதை எல்லாம் ஏற்றுக் கொள்பவர் உண்மையான குரு அல்ல.
உங்கள் தவறுகளை சுட்டி காட்டி அவற்றை திருத்தி உங்களை நல்வழி படுத்துபவரே உண்மையான குரு ஆவார்.
இந்த இடம் ஒரு ஒர்க்க்ஷாப் என்று வைத்துக் கொள்ளுங்கள்.பழுதடைந்த வண்டிகள் ரிப்பேருக்காக இங்கே வருகின்றன. மெக்கானிக்காகிய நான் நட்டு போல்ட்டு இவைகளை முடுக்கி சரி செய்ய வேண்டும் அல்லவா.அது போல் உங்கள் தவறுகளை கண்டறிந்து அவற்றை களைய வழி சொல்லி உங்களை சரியான வழியில் நான் செலுத்த வேண்டும் அல்லவா.அப்போது நான் உங்களிடம் கடுமை காட்டத்தானே வேண்டும்.இரும்பை நெருப்பில் வாட்டினால் தானே அதை வளைக்க முடியும்.உங்களை பொது வெளியில் கடிந்து கொண்டால்தானே நீங்கள் மீண்டும் தவறிழைக்காமல் இருப்பீர்கள்.
நீங்கள் லுங்கி கட்டிக் கொண்டு உங்கள் அறையை பெருக்கி கொண்டிருக்கிறீர்கள்.அப்போது உங்கள் நண்பன் உங்களை பார்க்க வருகிறான்.உடனே நீங்கள் வேறு ஆடை அணிந்து சரி செய்து வருகிறீர்கள் அல்லவா.ஏன்.பார்க்க சுத்தமாக நன்றாக இருக்க வேண்டும் என்பதால் தானே.அது போல நான் பொது வெளியில் தவறை சுட்டிக்காட்டி கண்டிப்பது நீங்கள் மீண்டும் தவறிழைக்காமல் இருப்பதற்கு தான்.
நீங்கள் நல்லவர்களாக இருந்தால் எனக்கு எந்த லாபமும் இல்லை.நீங்கள் கெட்டவராக இருந்தால் எனக்கு எந்த நஷ்ட்டமும் இல்லை.நான் உங்களிடமிருந்து எதையும் பெறப்போவதில்லை.ஆனால் நீங்கள் நல்லவர்களாக இருந்தால் அதனால் உங்கள் கல்லூரிக்கும் பெற்றோர்களுக்கு

பெருமை தானே. ஆக மொத்தத்தில் உங்கள் நன்மைக்காகவே உங்களை திருத்த நீங்கள் தவறிழைக்கும் போது கடிந்து கொள்கிறேன்.

அடுத்த கேள்வி:
ஸ்வாமி இன்றைக்கு இளைஞர்களிடம் என்ன படிக்கிறாய் என கேட்டால் எம் டெக் கம்ப்யூட்டர் சயின்ஸ் என சொல்கிறார்கள்.
இந்த கம்ப்யூட்டர் மோகம் எதனால் ஏற்படுகிறது ஸ்வாமி.

ஸ்வாமியின் பதில்:
இன்றைய நவீனயுக
பாடங்கள் எல்லாம் உங்கள் உள்ளேயே இருக்கிறது.
நீங்கள் தான் கம்ப்யூட்டர்.நீங்கள் தான் ஜெனரேட்டர்.உங்கள் உள்ளே மின்சாரம் இருக்கிறது.காந்தம் இருக்கிறது.வெப்ப சக்தி இருக்கிறது.வெளியே உள்ளது அனைத்தும் உள்ளே உள்ளதன் பிரதிபலிப்பே ஆகும்.கம்ப்யூட்டர் மிக சிறந்தது என நீங்கள் கூறுகிறீர்கள்.அதன் முன் நின்று கொண்டு என் மனைவி யார் என கேளுங்கள்
அதனால் பதில் சொல்ல முடிகிறதா பார்ப்போம்.விவரங்களை செய்திகளை முன்கூட்டியே கம்ப்யூட்டரில் சேமித்து வைத்தால் அதை வேண்டும் போது நீங்கள் பெற்று கொள்ள முடியும்.மனிதன் தானே கம்ப்யூட்டரை கண்டு பிடித்தான்.எனவே மனிதனே கம்ப்யூட்டரை விட சிறந்தவன்.
மனித மூளையே மிக பெரிய கம்ப்யூட்டர்.உங்கள் எண்ணற்ற அனுபவங்களும் நினைவுகளும் அங்கே சேமிக்கப் படுகின்றன.நீங்கள் யாருடனாவது பேசிக் கொண்டிருக்கும் போது உங்கள் முழு கவனமும் அதில் இருக்கும் போது ஒரு கொசு கடித்து விட்டால் உடனே அதை அடித்து வீசுகிறீர்களே.அது எவ்வாறு முடிகிறது.உங்கள் மூளை செய்தி அனுப்புவதால்.
நடந்து செல்லும் போது முள் இருந்தால் காலை அதன் மீது வைக்காமல் தாண்டி செல்கிறீர்களே. அது எவ்வாறு.உங்களிடம் இருக்கும் காந்த சக்தியே காரணம்.
உங்களை பார்த்து என்ன படிக்கிறாய் என்று கேட்டால் எம் டெக் என சொல்வீர்கள்.அப்படி என்றால் என்ன என கேட்டால் மாஸ்டர் ஆஃப் டெக்னாலஜி என்று கூறுவீர்கள்.
உண்மையான மாஸ்டர் யார்.புலன்களை அடக்கியவரே மாஸ்டர் ஆவார்.
மற்றவர்களெல்லாம் மிஸ்டர் ராவ் மிஸ்டர் குமார் என்று வெறும் மிஸ்ட்டர்கள் தான்.

உங்களுடைய படிப்பை நீங்கள் சமுதாய முன்னேற்றத்திற்கு செலவிட வேண்டும்.டேக் மை நாலட்ஜ் என்பது தான் டெக்னாலஜி ஆகும்.

அனைவருக்கும் நன்றி வர இருக்கின்ற நாட்களில் மேலும் ஸ்வாமி யின் அருளுரைகளை தொடர்ந்து கேட்டு மகிழ்வோம்
ஜெய் சாயிராம்.